IntSym 2019
9th International Symposium

# பொருளாதார செயற்பாடுகளும் சமூக சவால்களும்: காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவினை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு

**J.F. Nazeera**[274]

Correspondence: nazeera19941118@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய உலக நாடுகளில் பல்வேறு பிரதேசங்களில் அபிவிருத்தி இடம்பெறுகின்றன. அதுபோன்று மட்டக்களப்பு மாவட்ட காத்தான்குடி பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட சமூகத்தினரிடையே பொருளாதார அபிவிருத்தி எந்த அளவிற்கு வளர்ச்சியடைந்து காணப்படுனகின்றதோ அதற்கு சம அளவில் சமூக சவால்களும் அதிகரித்துள்ளன என்பதை காத்தான்குடி நகர சபை மற்றும் பிரதேச செயலக அறிக்கையின் முடிவுகளில் இருந்து தெரியவருகின்றது. இதுபோன்ற சமூக சவால்களை குறைத்து பொருளாதார ரீதியாக காத்தான்குடி மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்த அரசியல் அமைப்புக்கள், ஏனைய நிறுவனங்களினால் பல்வேறு செயற்பாடுகளும் யுத்திகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் பொருளாதார வளர்ச்சியினால் ஏற்படும் சமூக சவால்களினை தவிர்க்க முடியாதுள்ளது. கடந்த 10 வருடங்களாக காத்தான்குடி அபிவிருத்தி அடைந்து வருகின்ற போதிலும் பொருளாதார ரீதியாக ஏற்படும் சமூக சவால்களானது பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. பொருளாதார அபிவிருத்தியினால் எவ்வாறான சமூக சவால்கள் ஏற்படுகின்றன என்பதை கண்டறிவதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது முதலாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளை பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் பகுப்பாய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினாக்கொத்து 54, நேர்காணல் 04, இலக்கக்குழு கலந்துரையாடல் 1 பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் பெறுபேறுகளாக தொழில் பற்றாக்குறை, சம்பளம் குறைவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடல், உளவியல் பிரச்சினைகள், பாரிய தொழிற்சாலைகள் இன்மை, இடப்பற்றாக்குறை மற்றும் ஏனைய பல சவால்கள் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வு பொருளாதார ரீதியாக சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக்காட்டுவதனூடாக அதனை குறைப்பதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முன்வைப்பதாகவும் அதற்கு ஏனைய சமூக அமைப்புக்களினது செயற்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் எதிர்காலத்தில் இவ்வாறானதொரு ஆய்வினை மேற்கொள்வோருக்கு வழிகாட்டியாகவும் அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**பிரதான சொற்கள்:** அபிவிருத்தி, சனத்தொகை அடர்த்தி, தொழில் பற்றாக்குறை, நிறுவனமின்மை

[274] Department of Sociology, South Eastern University of Sri Lanka.

**அறிமுகம்**

இன்றைய உலகலாவிய ரீதியில் பிரபல்யமான அம்சமாக அபிவிருத்தி எனும் எண்ணக்கரு அமைந்துள்ளது. அபிவிருத்தி என்பது குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் மாத்திரம் வரையறுக்கப்படாது அனைத்துத் துறைகளுடனும் இணைக்கப்பட்ட அமைசமாகும் என UNESCO குறிப்பிடுகிறது. மேலும் அபிவிருத்தி தொடர்பாக டட்லி சியர்ஸ் கூறுவதானது, “வறுமை குறைவடைந்து, சமூக ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் போதல், வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்து காணப்படுதல் அபிவிருத்தியாகும்” என குறிப்பிடுகின்றார். எனவே ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல், தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், வறுமையைக் குறைத்தல், உயர்ந்தளவு உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், சமூக நலன்புரிகளை உயர் தரத்தில் வழங்குதல் போன்றன அபிவிருத்தி ஊடாக அடையப் பெறுவதனால் அபிவிருத்தி என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பாக அமைகின்றது. இந்த வகையில் இவ் அபிவிருத்தியினுள் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பன இரு பிரதான விடயங்களாக உள்ளடக்கப்படுகின்றன.

மக்களின் வாழ்க்கைத்தரத்தினை முன்னேற்றி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த ஒவ்வொரு நாட்டின் அரசும் பின்வரும் மூன்று பரப்பினுள் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்கின்றது. பொருளாதாரத்தின் நோக்கங்களை (economic objective) அடிப்படையாகக் கொண்டு அரசு செயற்படல். இதில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல் என்பன உள்ளடக்கப்படுகின்றன. உட்கட்மைப்பு வசதிகள், சேவைகளை வழங்குதல் இதன் கீழ் நெடுங்சாலைகளை அமைத்தல், வைத்தியசாலை, பொது நூலகங்களை நிர்மாணித்தல், குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் என்பன உள்ளடக்கப்படுகின்றன. ஊழியப்படையினரின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், வணிகங்களை பராமரித்தல். இதற்காக மக்களுக்குத் தேவையான திறன் விருத்தியை ஏற்படுத்தல். இவ்வாறாக பொருளாதார அபிவிருத்தி அடையப் பெறுகிறது (Aaron Hill, N.D).

சமூக அபிவிருத்தி என்பது மக்களின் தேவையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி செயன்முறையாகும். எனவே சமூக அபிவிருத்தியானது மக்களின் இயலுமையை கட்டியெழுப்புதல், வலுவூட்டல், சமூகத்தில் பலமான நிலையை ஏற்படுத்தல் என்பவற்றினூடாக ஏழைகள் அழிவுறு நிலையிலுள்ளவர்களை சமூகத்தில் உள்வாங்குவதனை ஊக்கப்படுத்துகின்றது (உலக வங்கி, 2015). 2018ம் ஆண்டினது கணக்கெடுப்பின்படி, உலகின் 177 நாடுகளில் முதலாவது பொருளாதார அபிவிருத்தி அடைந்த நாடாக அமெரிக்கா காணப்படுகின்றது. மேலும் வளர்ச்சியடைந்த நாடுகள் வரிசையில் அவுஸ்திரேலியா, ஜப்பான், ரஸ்யா, ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளும் ஆஜன்டினா, கனடா, சீனா, பிரேஸில் போன்ற நாடுகள் பொருளாதார அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் வரிசையிலும், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற நாடுகளில் இலத்தீன் அமெரிக்க நாடுகளும் தெற்காசிய நாடுகளில் சினா தவிர ஏனைய நாடுகளும் காணப்படுகின்றன (world Bank , 2018).

இலங்கையை பொறுத்தமட்டில் 2018ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தி 298.310 பில்லியனாகவும் தனிநபர் வருமானம் 13,857 ஆக காணப்படுகின்றது. 2010 – 2017 வரையான காலப்பகுதிகளில் இலங்கையின் பொருளாதாரம் சராசரி 5.8 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி தேசிய வறுமை விகிதமாதனது 2006,2007 இல் 15.3 சதவிகிதத்தில் இருந்து 2016ம் ஆண்டு 4.1 சதவிகிதம் வரை குறைந்துள்ளது ( உலக வங்கி, 2018).

எனவே இவ் ஆய்வுப் பிரதேசமான காத்தான்குடியைப் பொறுத்தவரை இது தனியாக முஸ்லீம்கள் வாழும் பிரதேசமாக இருப்பதனாலும் முஸ்லீம்களின் கலாசாரம் மிக இறுக்கமாக பின்பற்றப்படுவதனாலும் உள்நாட்டு யுத்தத்தினால், இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்பக்குள்ளாகிய போதிலும் கடந்த 10 வருடங்களாக இப் பிரதேசமானது பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்து வருகின்ற போதிலும் அதற்கு சமமான அளவில் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளும் சவால்களும் ஏற்படுகின்றன. ஆகவேதான் பொருளாதார செயற்பாடுகளினால் கண்டறியும் வகையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஆய்வுப் பிரதேசம்

கிழக்கிலங்கையில் மூவின மக்களும் வாழும் ஒரு மாவட்டம் தான் மட்டக்களப்பு மாவட்டம். மட்டக்களப்பு மாவட்டத்தின் மத்தியில் அமையப் பெற்ற நகரமே காத்தான்குடியாகும். இதன் வடக்கே மண்முனை பிரதேச செயலகத்தையும் தெற்கு எல்லையாக மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தையும் கொண்டது. அத்தோடு கிழக்கே வங்காள விரிகுடா கடலையும் மேற்கே மட்டக்களப்பு வாவியையும் எல்லைகளாகக் கொண்டமைந்துள்ளது. இது முழுமையாக முஸ்லீம் மக்கள் வாழும் அதேவேளை முஸ்லீம்களின் கலாசார பாரம்பரியம் இறுக்கமாக பின்பற்றப்படும் பிரதேசமாகும். தென்னாசியாவில் சனத்தொகை அடர்த்தி கூடிய ஒரு நகரமாகும். இரண்டரை கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட இப் பிரதேசத்தில் ஏறத்தாள 50000 பேர் வசிக்கின்றனர். இதில் ஆண்கள் 27994 பேர் பெண்கள் 23241 பேர் ஆவார்கள். இங்குள்ள மக்கள் அதிகமானோர் வர்த்தகத்தில் ஈடுபடுவதுடன் கைத்தொழில் மீன்பிடி போன்ற தொழிலகளிலும் ஈடுபடுகின்றனர்.

### ஆய்வுப் பிரச்சினை

அபிவிருத்தி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறுகின்றன. குறிப்பாக காத்தான்குடி அபிவிருத்திக்கு பெயர்போன பிரதேசமாக அமைந்துள்ள போதிலும் சமூக பின்னடைவும் பல்வேறு சவால்களும் ஏற்படுகின்றன. இதனை நிவர்த்தி செய்ய பல்வேறு பொருளாதார திட்டங்களையும் உதவிகளையும் அரசு, அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்ந்தும் சமூகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பொருளாதார செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் ஏன் இன்று வரை காத்தான்குடியில் பொருளாதார சமூக பிரச்சினைகள் ஏற்படுகின்றது என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாக அடையாளப்படுள்ளது.

### நோக்கம்

காத்தான்குடி பிரதேசத்தின் பொருளாதார செயற்பாடுகள் மூலமாக சமூகம் எவ்வாறான விளைவுகளை எதிர்கொள்கின்றது என்பதை கண்டறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.


### ஆய்வு முறையியல்

ஆவ்வாய்வு பண்புசார், அளவுசார் முறையை கொண்டமைந்துள்ளது. முதலாம் நிலைத்தரவு மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. முதலாம் நிலை தரவு சேகரிப்பு முறையில் எளிய எழுமாற்று மாதிரி அமைப்பினை கையாண்டு 18 கிராம சேவக பிரிவுகளில் ஒரு பிரிவுக்கு 3 என்ற அடிப்படையில் 54 வினாக்கொத்துக்கள் ஆய்வாளனுடைய வசதிக்கு ஏற்ப காத்தான்குடி மக்களிடம் வழங்கப்பட்டு , தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. காத்தான்குடி வர்தக சங்கத்தின் தலைவர், நகரசபை தவிசாளர் உட்பட 2 பிரபல ஆய்வாளர்களிடமுமாக 4 பேர்களிடம் நேர்காணல்களும் 1 குழுக்கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறையில் 2014-2017 வரையான பிரதேச செயலகத்தினது ஆண்டறிக்கை, காத்தான்குடி தொடர்பாக எழுதப்பட்டுள்ள நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றின் மூலமாக தகவல்கள் திரட்டப்பட்டு ஆய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. பெறப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் பண்புசார் மற்றும் அளவுசார் பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வு செய்து முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

### முடிவுகளும் கலந்துரையாடலும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள காத்தான்குடி பிரதேசத்தினை பொறுத்தவரையில் கடந்த காலங்களை விட குறித்த 10 வருட காலங்களில் உடனடியாக அன்றி படிப்படியாக பொருளாதாரமானது முன்னேற்றமடைந்து வருகின்றது என்பது பொதுவான கண்ணோட்டமாக காணப்படுகின்றது. இப்பொருளாதார விருத்தியானது பௌதீக ரீதியாக பல்வேறு முன்னேற்றகரமான அம்சங்களை எடுத்துக்காட்டினாலும் அதற்கு சமமான அளவில் பொருளாதார அபிவிருத்தியினால் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது எனலாம். உடல், உள, சமூக, மற்றும் இருப்பிட முதலீட்டல் அன்றாட வாழ்க்கை மறைகள் என்பவற்றில் எவ்வாறான பிரச்சினைகள் குறித்த காத்தான்குடி பிரதேச மக்கள் எதிர்கொள்கின்றனர் என்பதை எடுத்துக்காட்ட

வினாக்கொத்து, குழுக்கலந்துரையாடல் மற்றும் நேர்காணல் போன்ற தரவு சேகரிப்பு நுட்பமுறை மூலமாக பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




***வரைபடம் 1. பொருளாதார அபிவிருத்தியினால் சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள்***

*n = 54, மூலம்:வினாக்கொத்து*

**தொழில் பற்றாக்குறை**

சமூக மக்களின் அடிப்படை பொருளீட்டல் விடயங்களில் மிகப் பிரதானமானது தொழில் முறைமையாகும். வினாக்கொத்து பகுப்பாய்வின்படி, 31% காத்தான்குடி பிரதேச மக்கள் தொழில் பெற்றுக் கொள்வதில் சிரமப்படுகின்றனர் என எடுத்துக்காட்டலாம். இது தொடர்பான பிரதேச செயலகத்தினது 2014 – 2017 ஆண்டு வரையிலான 4 வருடங்களிற்கான வேலையற்றோர் விபரங்களை எடுத்து நோக்கும் போது,

***அட்டவணை 1. காத்தான்குடியில் 2014 – 2017 வரையான வேலையற்றோர் விபரம்***

*மூலம்: பிரதேச செயலக அறிக்கை 2014 -2017*

| **Qualifications** | **2014** | | **2015** | | **2016** | | **2017** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **M** | **F** | **M** | **F** | **M** | **F** | **M** | **F** |
| GCE O/l | 1557 | 2075 | 1372 | 1832 | 1381 | 1779 | 1758 | 2197 |
| GCE A/L | 918 | 1193 | 878 | 1220 | 888 | 1219 | 1105 | 1487 |
| Below O/L | 4021 | 4341 | 1726 | 1733 | 4580 | 4766 | 4959 | 6088 |
| Technical College | 36 | 52 | 56 | 49 | 68 | 49 | 97 | 71 |
| Graduates | 120 | 107 | 160 | 161 | 73 | 84 | 108 | 102 |
| Other | 100 | 73 | 100 | 79 | 70 | 91 | 107 | 93 |

மேற்காட்டப்பட்ட அட்டவணையின் 4 வருட பிரதேச செயலக அறிக்கையினை ஒப்பிட்டுப்பார்க்கையில் மொத்தமாக 18 கிராம சேவக பிரிவுகளிலும் வாழும் மக்கள் தொகையில் க.பொ.த சாதாரண தரத்திற்கு மேல் கல்வி கற்றவர்கள் முதல் பட்டதாரிகள் வரையினாலான ஆயிரக்கணக்கானோர் வேலையின்றி காணப்படுகின்றனர் என அறிந்து கொள்ள முடியுமாக உள்ளது. 2014ம் ஆண்டு ஆண்கள் 6752 பேர்களும், பெண்கள் 7841 பேர்களும் 2015ம் ஆண்டு 4292 பேர்களும் பெண்கள் 5074 பேர்களும் வேலையற்று காணப்பட்டனர் என தரவுகள்

தெரிவிக்கின்றன. அதுபோன்று 2016ம் ஆண்டு ஆண்கள் 7060 பேர்களும் பெண்கள் 7988 பேர்களும் 2017ம் ஆண்டு 8117 பேர்களும் பெண்கள் 10341 பேர்களும் தொழில் இன்றி காணப்படுகின்றனர்.

இதன் அடிப்படையில் 2016ம் ஆண்டு மொத்தமாக 14593 வேலையற்றோரும் 2015ம் ஆண்டு 10366 வேலையற்றோரும் 2016ம் அண்டு 15048 வேலையற்றவர்களும் காணப்பட்டனர். ஆக 2014ம் ஆண்டு காணப்பட்டதை விட 2015ம் ஆண்டு 4227 வேலையற்றவர் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டுள்ளது. ஆனால் 2010ம் ஆண்டு 2015ம் ஆண்டை விட 4682 நபர்கள் தொழில் இன்றி காணப்பட்டுள்ளனர். 2017ம் ஆண்டு 3410 எண்ணிக்கையில் அதிகரித்தவாறாக மொத்தமாக 18458 வேலையற்றவர்கள் காத்தான்குடியில் பிரதேச செயலக மதிப்பீட்டின் படி பதிவாகியுள்ளனர் என தெரிய வருகின்றது. ஆகவே ஒவ்வொரு வருடமும் அண்ணளவாக 3000 மேற்பட்டவர்கள் அதிகரித்துக் கொண்டே வருவதானது சமூகம் எதிர்கொள்கின்ற பாரியதொரு சவால் என அடையாளம் காணலாம். இது தொடர்பான நேர்காணலின் போது,

“வேலையின்றி தகுதியுடைய நபர்கள் காணப்படுவதானது பொருளாதார வருமானத்திலும் குடும்ப பராமரிப்பிலும் பாரியதொரு பின்னடைவையும் குடும்ப பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றது. இவை தவிர குடும்பத்தில் அண்ணளவாக 5 உறுப்பினர்கள் காணப்பட்டாலும் கூட உழைக்கின்ற பொறுப்பு குடும்ப தலைவனிடம் மாத்திரமே தங்கியுள்ளது. இவ்விடத்தில் ஒருவருடைய வருமானம் போதாத நிலைமை காணப்படுகின்றது” என கூறினார். (நேர்காணல்)

இவ்விடத்தில் நோக்கப்படுவது யாது எனில் பொருளாதார அபிவிருத்தி தன்மை முன்புள்ள காலகட்டங்களை விட தற்போது காணப்பட்டாலும் அதற்கு ஏற்றார் போன்று தொழில் பற்றாக்குறையும் நிலவுகின்றது. இத தவிர காத்தான்குடி மக்களின் மனநிலையினை பொறுத்தமட்டில் தனது சொந்த இடத்திலேயே தொழில் மேற்கொள்ள வேண்டும் என்றும், வெளியிடங்களில் வாய்ப்புக்கள் காணப்பட்டாலும் அதை நாடிச் செல்லாத நிலைமையும் காத்தான்குடி சமூகத்தில் நிலவுகின்றது. ஒட்டுமொத்தமாக நோக்கும் போது பௌதீக பார்வைக்கு காத்தான்குடி தொழில் வாய்புக்கள் நிரம்பிய சூழலைப் போன்று காட்சி அளித்தாலும் தொழில் இன்றியும் கூலித்தொழில்களில் ஈடுபட்டும், யாசகம் கேட்டு வாழ்வை பழக்கப்படுத்தும் முறைமையும் அதிகளவில் நிகழ்கின்றது. இது பொருளாதாரத்தின் மிக மோசமான நிலையினை காத்தான்குடி மக்கள் எதிர்கொள்கின்றனர் என்பதை வெளிப்படுத்துகின்றது எனலாம்.

**சம்பளம் போதாமை**

பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்ட போதிலும் அதை அனைத்து மக்களும் அனுபவிக்கின்றனர் என கூறமுடியாது. ஏனெனில், ஒரு சாரார் மாத்திரமே வர்தகம் மற்றும் வியாபாரங்களை மேற்கொள்கின்றனர். அவர்களே அதனுள் பெறப்படும் இலாபத்தினை பெற்றுக் கொள்கின்றனர். கூலித்தொழிலாளிகள் மற்றும் சிறிய வியாபாரம் செய்பவர்கள் இலாபம் அனுபவிப்பதில் சிரமப்படுகின்றனர். இதுதொர்பான வினாக்கொத்து பகுப்பாய்வின் போது 24% விளைவுகளாக சம்பளம் குறைவு என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது. மேலும் இது தொடர்பான காத்தான்குடி பிரதேச செயலகத்தின் 2014 – 2017 வரையிலான கணக்கெடுப்பின்படி, சம்பளம் தொடர்பான விடயத்தினை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

***அட்டவணை 2. 2014 – 2017 வரையான காலப்பகுதியில் காத்தான்குடி பிரதேச மக்களின் சம்பளம் தொடர்பான விடயம்***

*மூலம்: 2014 – 2017 வரையான பிரதேச செயலக அறிக்கை*

| **Income level** | **2014** | **2015** | **2016** | **2017** |
|---|---|---|---|---|
| less than 1000 | 857 | 856 | 849 | 693 |
| 1000 – 5000 | 4483 | 3857 | 3739 | 3335 |
| 5000 – 10000 | 2764 | 3114 | 3104 | 2588 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10000 – 15000 | 2464 | 2536 | 2817 | 2870 |
| 15000 – 20000 | 1393 | 1658 | 1575 | 2004 |
| 20000 – 25000 | 1029 | 1113 | 1053 | 1355 |
| above 25000 | 737 | 772 | 968 | 1399 |

மேற்காட்டப்பட்ட அட்டவணையை வைத்துப் பார்க்கும் போது சராசரியாக ருபா 25000 வரையினாலான சம்பளத்தினையே பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அல்லது வேலை செய்பவர்கள் ஊதியமாக பெற்றுக் கொள்கின்றனர். அதிலும் குறிப்பாக காத்தான்குடி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் கீழ் ருபா . 1000 வருமானம் சம்பளம் பெறுபவர்களது விபரமானது மிகத்தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது எனலாம். 2014ம் ஆண்டு 13724 தொழிலாளர்களில் 857 நபர்கள் 1000 ருபாவிற்கு குறைவான வருமானம் பெறுபவர்களாகவும் காணப்பட்டனர். 1000 – 5000 வரையான வருமானம் பெறுபவர்களே 4483 பேர்கள் காணப்பட்டனர். ஆக இவ்வருமான ஒப்பீட்டலில் நடுத்தரமான வருமானம் அளவினையே அதிகமானோர் பெறுகின்றனர்.

அதுபோன்று 2015ம் ஆண்டு 1000 குறைவான சம்பளம் பெறுபவர்கள் 856 பேர்கள் காணப்பட்டனர். 25000 மேலதிகமான சம்பளம் பெறுபவர்கள் 772 பேர்களும் 1000 – 5000 வரையிலான வருமானம் பெறுபவர்கள் 3857 பேர்கள் காணப்பட்டனர். அதிகமான நபர்கள் இவ்வருமான அளவினையே பெற்றுக் கொள்கின்றனர். 2016ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 1000 குறைவான வருமானம் பெறுபவர்களது எண்ணிக்கையானது 2015 விட சற்று குறைவான 849 பேர்களும் 2017ம் ஆண்டு அதைவிட குறைவாகி 693 பேர்களும் மிகக் குறைவான வருமானம் பெறுகின்றனர். அது போன்று 25000 கூடிய வருமானம் பெறுபவர்கள் 2016ம் ஆண்டு 1399 பேர்களும் வருமானம் பெறுகின்றனர். ஒட்டுமொத்தமாக நோக்கும் போது 4 வருடங்களின் கணக்கெடுப்பின்படி, 25000 ருபாவிற்கு அதிகமாக வருமானம் பெறுபவர்கள் சராசரியாக 800 – 900 வரையினாலானவர்களே காணப்படுகின்றனர். ஆயினும் 2017ம் ஆண்டு 1400 அளவிற்கு அதிகமாகியுள்ளது. இருப்பினும் 2017 இறுதியான தரவுகளின் அடிப்படையில் 14244 தொழில்புரிபவர்கள் 1000 – 5000 வருமானம் பெறும் தொழிலாளர்களே காணப்படுகின்றனர். இது தொடர்பான நேர்காணலின் போது,

"காத்தான்குடி பிரதேசமானது எவ்வளவு தூரம் பொருளாதார, வர்த்தக வியாபார நடவடிக்கைகளில் அபிவிருத்தி அடைந்தது போன்று காட்சி அளித்தாலும் உண்மையிலேயே அனைத்தும் வெளிப்படையான விடயமாக காணப்பட்டுள்ளதே தவிர உட்கட்டமைப்பு ரீதியில் அனைத்து மக்களும் ஏதோ ஒரு இன்னலை அனுபவிக்கின்றனர். எடுக்கும் சம்பளமானது அன்றாட தேவையை பூர்த்தி செய்ய இயலாத போது பொருட்களின் விலையும் காணப்படுகின்றது. காத்தான்குடி சூழலை பொறுத்தவரையில் பணம் இல்லாமல் வாழ்வது என்பது சாத்தியமில்லாமல் உள்ளது"
(நேர்காணல்)

ஆக இது தொடர்பாக கவனம் செலுத்தினால் பொருளாதார அபிவிருத்தி என்று காணப்படுவதில் நன்மை வெளிப்படையாக காணப்பட்டாலும் உண்மையிலேயே பொருளாதார அபிவிருத்திக்கு மாறாக பொருளாதாரத்தில் மிகப்பிரதானமானது சம்பளம் பெறுவது மிகக் குறைவாகவே மக்கள் பெறுகின்றனர் என்பதை காத்தான்குடி பிரதேச செயலக அறிக்கை, நேர்காணல் மற்றும் வினாக்கொத்து மூலமாக பெற்றுக் கொள்ள முடியுமாக உள்ளது.

**தொழிற்சாலைகள் இன்மை**

பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் போது சமூகத்திற்கு ஒருபுறம் நன்மை காணப்பட்டாலும் மறுபுறம் விளைவுகளின் எண்ணிக்கை அதரித்தவாறே காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக 13% நபர்கள் வினாக்கொது பகுப்பாய்வின்படி தெரிவிப்பதானது, காத்தான்குடியை பொறுத்த வரையில் பாரியபொரு தொழிற்சாலைகளோ தொழில் வழங்கும் நிறுவனமோ இல்லை. இத்தொழில்சாலை இன்மையானது மக்கள் தொழில் வாய்ப்பினை இழப்பதற்கும், தொழில் தேடுவதற்கும் சவாலாக அமைகின்றது. பொருளாதார அபிவிருத்தி காத்தான்குடியில் ஏற்படுகின்றது என்பது வெறுமனே

கடைகள் திறப்பதன் மூலமே எடுத்துக்காட்டப்படுகின்றது. இதன் மூலம் குறித்த கடை முதலாளி மாத்திரம் கடைகளை நடாத்துதல், சில சமயம் ஒரு கடையில் 2 – 5ற்கு உட்பட்ட நபர்களே ஊதியத்திற்காக தொழில் செய்தல் என்பதே காணப்படுகிறது. இதுதவிர பாரிய அளவினாலான அல்லது அதற்கு மேற்பட்ட அளவு தொழில்களை வழங்கக் கூடிய தொழிற்சாலை காணப்படாமை சமூகம் எதிர் கொள்ளும் மற்றொரு சவாலாகும். மேலும் இக்கருத்து தொடர்பான நேர்காணலின் போது,

"காத்தான்குடி மக்கள் தொகை கூடியளவு அமைந்துள்ள பிரதேசமே காத்தான்குடியாகும். அனைவராலும் சுயதொழில் மேற்கொள்ள வசதியும் இல்லை. அரச தொழில் புரியும் வாய்ப்பும் இல்லை. பெரிய அளவினாலான தொழிற்சாலைகள் காணப்படுமாக இருந்தால் அது இப்பிரதேச மக்களின் பொருளாதார பராமரிப்பிற்கு உறுதுணையாக அமையும். ஆனால் பொருளாதார விருத்தி பொதுவாக காணப்படினும் இது போன்ற சவால்களும் மக்கள் எதிர்கொள்கின்றனர் " என கூறினார்.

(நேர்காணல்)

எனவே இது போன்ற விடயமானது வேலையின்றி காணப்படும் சுமார் 18000 மக்களுக்கும் சவாலாகவும் வாய்ப்புக்கள் நழுவவிடப்படுவதற்கும் ஏதுவாக அமைகின்றது. இந்நிலையில் இருந்து மாற்றத்தினை ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள், மாற்றீடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாடு தேவைப்படுகின்றது.

**வெளிநாட்டு வேலைக்கு செல்லல்**

இன்றைய காலகட்டத்தினை பொறுத்தவரையில் காத்தான்குடியில் ஊரில் தொழில் செய்கின்றவர்கள் தனது தொழில் திருப்தியின்மை, சம்பளம் குறைவு, நிரந்தர தொழிலின்மை போன்ற பல்வேறு காரணங்களிற்காகவும் காத்தான்குடியை விட்டு வெளிநாடுகளிற்கு செல்கின்றனர். ஆண் மாணவர்கள் அதிகமானவர்களின் பாடசாலை இடைவிலகல், கல்வியில் ஆர்வமின்மைக்கான காரணமாக அமைவது வெளிநாடுகளிற்கு சென்று தொழில் செய்ய வேண்டும் என்பதாகும். ஏனெனில் காத்தான்குடி சமூகத்தினை பொருத்தமட்டில் ஒவ்வொரு பெண்பிள்ளைகளிற்கும் ஒவ்வொரு தனியான வீடு கட்டிக்கொடுத்து திருமணம் முடிக்கும் முறைமையே காணப்படுகின்றது. இந்தப் பொறுப்பானது குடும்பத்தில் உள்ள தந்தை அல்லது மகனிற்கே உரியதாகும்.

இது போன்ற சூழ்நிலை காணப்படும் போது ஆண்கள் இவ்வூரில் தொழில் செய்து உழைப்பது என்பதும், குடும்ப செலவுகளை பார்ப்பது என்பதும் சாத்தியமில்லாத ஒன்றாக காணப்படுகின்றது. ஆக அவர்கள் அவர்களது முடிவுகளை மாற்றிக் கொண்டு வெளிநாட்டு வேலையை நாடும் நிலைமை காணப்படுகின்றது. இதற்கு பிரதான காரணமாக அதியுயர் பொருளாதார செலவு முறைகளும், வருமானம் போதாமையுமே ஆகும். பொருளாதார நடவடிக்கையினை பொருத்தவரையில் அபிவிருத்தியின் மாயையானது இருப்பவர்களை மென்மேலும் வளர்ச்சி அடைய செய்கின்றதே தவிர வளர்ந்து வருபவர்களையோ கூலித்தொழிலாளர்களையோ அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதாக அமையவில்லை எனலாம்.

***அட்டவணை 3. வெளிநாடுகளில் வேலை செய்பவர்களது விபரம் 2014 – 2017***

*மூலம்: 2014 – 2017 வரையான பிரதேச செயலக அறிக்கை*

| Year | Male | Female |
|---|---|---|
| 2014 | 827 | 274 |
| 2015 | 951 | 134 |
| 2016 | 1132 | 164 |
| 2017 | 1041 | 97 |

மேற்காட்டப்பட்ட அட்டவணையை அவதானிக்கும் போது 2014ம் ஆண்டு வெளிநாட்டு வேலைக்காக சென்றவர்கள் மொத்தமாக 1101 ஆகும். அதில் 827 ஆண்களும் 274 பெண்களும் காணப்படுகின்றனர். 2015ம் ஆண்டு அதே போன்று 1085 மொத்தமான வெளிநாட்டு வேலையாட்கள் கணக்கிலெடுக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து 2015இல் ஆண்கள் 1132, பெண்கள் 164 பேர்களாக மொத்தம் 1296 காத்தான்குடியை கொண்டவர்கள் வெளிநாடுகளில் தொழிலுக்காக சென்றுள்ளனர். 2017ம் ஆண்டு 1138 பேர்களில் 1041 ஆண்களும் 97 பெண்களும் தனது பொருளாதாரத்தினை பெற்றுக் கொள்வதற்காக சென்றுள்ளனர் என்பது தொடர்பான தரவுகளை காத்தான்குடி பிரதேச செயலகத்தினது வருடாந்த அறிக்கைகளில் இருந்து எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டு வேலை செய்பவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஆண்கள், பெண்களில் அதிகமானோர் ஏனைய நாடுகளிற்கு செல்வது அதிகமாக காணப்படுகின்றது. இது போன்ற நிலைமையானது தான் பிறந்து வளர்ந்த பிரதேசத்திலேயே தனது பொருளாதார ஈட்டலினை மேற்கொள்ள இயலாதவாறு அமைந்துள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட குழுக்கலந்துரையாடலின் போது,

“செய்வதற்கு தொழில் இன்றி வெளிநாடு செல்பவர்கள் குடும்பம், சந்தோசம், துன்பம், விழாக்கள் என்பவற்றில் பங்கு கொள்ளாமல் அனைத்தையும் இழந்து வாழ்கின்றனர். மீண்டும் சொந்த இடத்திற்கு வரும் போது செய்வதற்கு தொழில் இன்றி மீண்டும் தேடித் திரியும் நிலைமை காணப்படுகின்றது ” என தெரிவித்தனர்.

(குழுக்கலந்தரையாடல்)

இக்கருத்தினை அவதானிக்கும் போது வெளிநாட்டு வேலை செய்து பின்பு வருபவர்கள் காத்தான்குடியில் உள்ள பொருளாதார ஈர்ப்பு, நபர்ப்புற வாழ்க்கை, வாகன மயக்கம், இரவு நேர கலாசார பொழுது போக்கு முறைமை என்பவற்றினூடாக பழக்கப்பட்ட இன்றைய சமூகமானது ஏனையோரை போன்று தாமும் வாழ வேண்டும் என்ற நிலைக்கு மாற்றமடைந்து பணத்தை சேமிக்காமல் வீணாக செலவு செய்யும் போக்கினுள் இட்டுச் செல்கின்றது எனலாம். இவ்வாறாறன நிலைமைகளின் போது இப்பிரதேச மக்கள் அன்றாட செலவிற்கு கூட சிரமப்படும் நிலையினை தோற்றுவிக்கின்றது.

குறித்த சில ஆண்களின் வாழ்வானது 20, 30 வருடங்களிற்கு மேலாக வெளிநாடுகளில் வேலை செய்து வந்த பிற்பாடும் தனது குடும்பத்தினை பராமரிக்கும் நிலையை தோற்றுவிக்கின்றது. ஆண்களைப் போன்று பெண்களும் வெளிநாடுகளிற்கு சென்று பணிபுரியும் முறைமை கடந்த 1980 ஆண்டுகளிற்கு பிற்பாடு ஏற்பட்ட சமூக மாற்றமாகும். இந்நிலை தற்போதும் காணப்படுகின்றது.

பெண்கள் வெளிநாடுகளிற்கு செல்லும் போது அவர்களது குடும்ப கட்டுக்கோப்பு நலிவடைகின்றது. பிள்ளைகளின் பராமரிப்பு குறைவாதல், கணவன் மனைவியிடையே பிரச்சினை ஏற்படல், கணவன் தொழில் செய்வதில் பொடுபோக்கினை ஏற்படுத்தல், கணவன் கடன்களை பெற்ற பிற்பாடு வீட்டை விட்டு தலைமறைவாகுதல் போன்ற பிரச்சிகைளும் குறித்த சமூகத்தினுல் எழுகின்றன. 2018ம் ஆண்டு பெண்கள் வெளிநாடுகளிற்கு பணிப்பெண்களாக செல்கின்ற எண்ணிக்கையானது குறைவடைந்தும் வருகின்றது எனலாம்.

தொடர்ந்து வெளிநாட்டு வேலையாட்கள் மீண்டும் காத்தான்குடிக்கு வருகை தந்து வாழ எத்தணிக்கும் போது பாரிய நெருக்கடியும் ஏற்படுகின்றது என கூறலாம். தொழில் அற்றோர் என்ற வகைப்பாட்டிற்குள்ளும் , கைத்தொழிலோ, வேறு சுயதொழிலோ செய்ய தெரியாதவர்களாகவும் காணப்படும் போது சமூகத்திற்கு பாரிய பிரச்ச்சினையாக மாறுகின்றது. ஏனெனில் சாதாரண தனிமனிதருடைய பிரச்சினை என்று கருதும் போது ஒவ்வொரு பிரச்சினைகளும் சமூகப் பிரச்சினையாக உருவெடுக்கவும் வாய்ப்பாக அமைகின்றது.

**உளவியல் பிரச்சினைகள்**

வினாக்கொத்தினது பகுப்பாய்வின்படி, 9% காரணமாக மக்கள் எடுத்துக்காட்டுவது யாதெனில் உளவியல் ரீதியான காரணிகள் அகும். இது தொடர்பான இலக்குக் குழு கலந்துரையாடலின் போது,

" உளவியல் ரீதியான விளைவுகளும் தாக்கங்களும் ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைவது மக்களின் மனதில் எற்படுகின்ற அழுத்தம், பதற்ற நிலையே ஆகும். இது பொரளாதார விருத்தியான நபர்களும், பொரளாதார ரீதியாக குறைவான வருமானத்தினை பெறுபவர்களும் உளப்பாதிப்புகளுக்குள்ளாகின்றனர். வசதி கொண்டவர்கள் பொருளாதாரத்தினை பாதுகாப்பது எவ்வாறு என்றும், இல்லாதவர்கள் தமது அன்றாட தேவைக்கு கூட போதியளவு பொருளாதார வசதி இல்லை எனவும் மன உளைச்சலுக்குள்ளாகின்றனர் " என எடுத்துக்கூறினார்கள்.
(குழுக்கலந்துரையாடல்)

இவ்வாறான காரணங்கள் மாத்திரமின்றி பிறர் எவ்வாறான வாழ்க்கையினை வாழ்கின்றனர் என்பதனைப் பார்த்து சமூகங்களிற்குள் ஏற்றத்தாழ்வு, பரம்பரை வேறுபாடுகளும் ஏற்படுகின்றனர். எடுத்துக்காட்டாக, இது பணக்கார குடும்பம், இது பரம்பரை பரம்பரையாக வசதியற்ற குடும்பங்கள் என சமூக ரீதியிலான வேறுபாடுகள் பார்க்கப்படுகின்றன. இந்நிலையானது இயல்பாக காத்தான்குடி பிரதேசவாழ் மக்களின் மனநிலையில் தாக்கத்தினை செலுத்துகின்றது என கூறலாம். மேலும் ஒருவர் மேல் ஒருவருக்கு போட்டி, பொறாமை கொள்ளும் தன்மை, கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் பிரச்சினை, கடன் மற்றும் காசோலை பிரச்சினைகள், தவணை அடிப்படையில் தொழிலுக்காக வாகனங்கள் எடுத்தல் பின்பு அதற்கான பணத்தினை உரிய காலப்பகுதியில் செலுத்தாமல் விடுதல் மற்றும் வட்டிக்கு தனது நகைகள், வீட்டுப் பத்திரங்களை அடகு வைத்து பின்பு அதை மீட்க முடியாத நிலைக்கு தள்ளப்படுதல் போன்ற பல்வேறு சவால்களினை இப்பிரதேச மக்கள் அன்றாடம் தங்களது வாழ்வில் அனுபவிக்கின்றனர் என்பன போன்ற விடயங்களையும் இலக்கக் குழு கலந்துரையாடலின் மூலமாக பெற்றுக் கொள்ள முடியுமாக காணப்பட்டது. மற்றொரு நேர்காணலின் கருத்தானது,

> " ஒருவர் ஒரு வாகனம், வித்தியாசமான முறையில் கடைகள், வீடு அல்லது புதிதான முறையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதை போன்று தாமும் செய்ய வேண்டும் என்ற மனநிலை கொணடவர்களே அதிகம் காணப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக, ஒருவகை பொருள் வியாபாரத்தினை ஒருவர் ருபா 900 விற்பனை செய்தால் அதை பொருளை குறைந்த இலாபம் கிடைத்தாலும் பரவாயில்லை என்று மற்றவருக்கு போட்டியாக ருபா 800 விற்பனை செய்யும் மனநிலையிலேயே இக்காத்தான்குடி பிரதேச மக்கள் காணப்படுகின்றனர் " என தெரிவித்தார்.

மேலும் இதனுடன் இணைந்தவாறாக பின்வரும் விடயத்தினையும் எடுத்துக்காட்ட முடியும். அதாவது காத்தான்குடி வர்தகம், வியாபாரம் மேற்கொள்ளும் பிரதேசமாக காணப்படுவதால் இங்கு வாழும் அனைத்து மக்களும் பொதுவாக ஆண்கள் சொந்த தொழில் செய்ய மூலதனம் இன்றி கடனிற்கும், காசோலைக்கும் செய்கின்றனர். பின்பு கடனை மீளச் செலுத்த இயலாமல் வெளிநாடுகளிற்கு சென்று விடுகின்றனர். இதனால் கடன் கொடுத்தவர்கள் வீடுகளிற்கு வந்து மனைவி, பிள்ளைகளுடன் முறைப்பாடு, ஏசுதல், தவறாக பேசும் சூழல் என்பனவும் ஏற்படுகின்றன. இது போன்ற செயற்பாட்டின் மூலமான விளைவுகள் பல்வேறு அளவினாலான பாரிய உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன எனலாம்.

**இடப்பற்றாக்குறை**

காத்தான்குடி பிரதேசம் எதிர் கொள்ளும் பாரிய பிரச்சினையாக இடப்பற்றாக்குறை காணப்படுகின்றது. 6.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் 47125 மக்கள் வாழ்கின்றனர். 18 கிராம சேவக பிரிவுகளில் மக்கள் பரம்பல் பல்வேறு வகைகளில் காணப்படுகின்றன. அதிகமாக பொருளாதார மாயையில் சிக்குண்ட காத்தான்குடி பிரதேச மக்கள் தங்களது வசதிவாய்ப்பினை வீடு, கடைகள் மூலமாக வெளிப்படுத்த நாடுகின்றனர். பெரிய நிலப்பரப்பினுள் பெரிதாக அடுக்கு மாடிகளை கட்டி ஒரு பிள்ளைக்கு கொடுத்து திருமணம் செய்து வைக்கின்றனர். இது தவிர ஒவ்வொரு பெண் பிள்ளைக்கும் ஒவ்வொரு தனியான வீடுகள் கட்டும் முறைமையும் காணப்படுகின்றது. இதன்போதான கலந்துரையாடலில்,

"தற்காலத்தினை பொறுத்தவரையில் காத்தான்குடியில் கட்டப்படும் வீடுகள் ஒவ்வொன்றுடனும் இணைத்து கடைகளும் கட்டப்படுகின்றன. ஆரம்ப காலங்களில் ஒரு வீடுகட்டிய இடங்களில் தற்போது 2 அல்லது 3 வீடுகள் கட்டுகின்றனர். எவ்வளவு விலை உயர்வாக காணப்பட்டாலும் காத்தான்குடியிலேயே வாழ வேண்டும் என்ற

நிலையினை தோற்றுவிக்கின்றது. ஒரு அடி நிலமானது 2 இலட்சம் ருபா பெறுமதிக்கு செல்கின்றது. இதனால் வசதி கொண்டவர்கள் மாத்திரம் காணி வாங்கும் நிலைமை மாறியுள்ளது. இது ஏனைய மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்துகின்றது'' எனவும் தெரிவித்தனர்.
(கலந்துரையாடல்)

இவை தவிர சொந்த பிரதேசத்தில் தொழில் செய்யும் அளவிற்கு இடமோ, கடைகளோ இல்லை. அவ்வாறு வாடகைக்கு எடுத்தாலும் ருபா 20000 மேலான வாடகைப் பெறுமதியே வெலுத்த வேண்டியுள்ளது. இது அனைத்து வித மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பொருந்தும் வகையில் அமையவில்லை. சில சமயம் வியாபாரம் இடம்பெறாவிடினும் அதற்குரிய பணத்தை செலுத்த வேண்டி நிர்ப்பந்திக்கப்படுவது நஷ்டத்திலேயே செல்கின்றது. இது பாரிய சேதத்தினை நாலடைவில் மக்களுக்கு பொருளாதார ரீதியில் எற்படுத்துகின்றது.

இவ்வாறான இடப்பற்றாக்குறையானது வாழிட நெருக்கடி, முறையான வடிகாண் முறைமை, கழிவகற்றல் முறைமை, பொது வேலி பிரச்சினைகள் என்பன ஏற்படவும் காரணியாக அமைகின்றன. பொருளாதாரத்தின் விளைவினாலேயே காத்தான்குடியில் மக்கள் அதிகம் தங்கி காணப்படுகின்றனர். அதுபோல வெளிப்பிரதேச மக்களும் இங்கு வந்து குடியேறவும், தொழில்கள், கைத்தொழில்களை புரியும் நிலையினால் தொடர்ந்து நெருக்கடியான சூழல் உருவாகியும் காணப்படுகின்றது.

**ஆடம்பர வாழ்க்கை**

இப்பிரதேசமானது ஆடம்பர வாழ்வுக்கு பெயர்போன பகுதியாக காணப்படுகின்றது. இருப்பினும் ஆரம்பத்தில் காணப்பட்ட இம்முறைமையானது தற்போது மாற்றமடைய பொருளாதார விருத்தியும் பணப்புழக்கமுமே காரணமாயின. உணவு, உடை, இருப்பிடம், செலவு, கல்வி போன்ற அனைத்திலும் ஆடம்பர வாழ்க்கை எடுத்துக்காட்டப்படுகின்றது. இது தவிர கல்வி என்பது வியபாரமாகி வருகின்ற சூழலில் வசதியற்றவர்களும் குறித்த நிலைமைக்குள் தங்களது பிள்ளையையும் உள்வாங்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். எம்மிடம் என்ன உள்ளது என்று பாராமல் அனைவரையும் போன்று நாமும் வெளிநடப்பிற்காக வாழ வேண்டிய சூழலுக்கு அனைவரும் தள்ளப்படுகின்றனர். இல்லாவிடின் ஏனையவர்கள் பேசாமலும், குறைவாகவும் கணப்கெடுக்கும் சூழலே நிகழ்கின்றன. இது தொடர்பான நேர்காணலின் போது,

> ''பண்டிகைக் காலங்களில் தம்மிடம் பணம் இல்லாவிடனும் கூட கடனிற்காவது தங்களது தகுதிக்கு மீறிய ஆடைகளையும், பொருட்களையும் கொள்வனவு செய்கின்றனர். வெளிப்படையான வாழ்க்கை, சமூகத்திற்காகவும், கௌரவத்திற்காகவும் காத்தான்குடி வாழ் மக்கள் வாழ்கின்றார்களே தவிர தமக்காக வாழும் நபர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர்'' என தனது கருத்தினை தெரிவித்தார்.
>
> (நேர்காணல்)

இவை தவிர வீட்டிலேயே சமைத்து ஆரோக்கியமான உணவுகளை உண்ணாமல் தற்காலத்தினை பொறுத்தவரையில் பொருளாதார முன்னேற்றத்தினால் மூன்று நேர உணவுகளையும் கடைகளில் வாங்கி உண்ணும் வழமையே காணப்படுகின்றது. இதுதவிர பொதி செய்யப்பட்ட உணவுகள், KFC, BFC என்ற உணவக கலாசார முறைமைக்கும் மக்கள் மாற்றமடைந்து வாழ்கின்றனர். காத்தான்குடியின் உணவுக்கலாசார முறைமையினை உற்று நோக்கும் போது அதிகூடுதலான செலவு உணவிற்காகவே செல்கின்றன. கூடுதலாக தினம் தோறும் உழைக்கும் சம்பளம் அன்றாட தேவைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படுகின்றது. இதனால் ஏனைய தேவைகள் முடக்கப்படும் நிலைமையை உருவாக்குகின்றது. இதனால் ஏற்படும் விளைவுகளும் பிரச்சினைகளும் மக்களின் உடற் சுகாதாரத்தில் பாதிப்பை செலுத்துகின்றது எனலாம். பொதுவாக ஆடம்பர வாழ்க்கையே காத்தான்குடி மக்களின் அடித்தளமாக அமைந்துள்ளது.

## 7. முடிவுரையும் பரிந்துரையும்

ஆகவேதான் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேசம் பொருளாதார விருத்தியின் விளைவாக ஆடை, வாகனம், கடைகள், ஊரினது பௌதீக சூழல் போன்ற வெளித்தோற்றத்தில்

தனது செழுமையை காட்டினாலும் இதனால் மக்கள் எதிர்கொள்ளும் மறைமுகமான விளைவுகள் அதிகமாக காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் காணப்படும் வசதி வாய்ப்புக்களும், சொகுசு முறைமைகளும் பொருளாதார அபிவிருத்தியினை நோக்கி இப்பிரதேசம் செல்கின்றது என்பதைக் காட்டுகின்றதே தவிர மக்களினுடைய உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சி வேகம் குறைவாகவே காணப்படுகின்றது எனலாம்.

மக்கள் அறிந்திராக பல்வேறு விளைவுகளை எடுத்துக்காட்ட வேண்டிய தேவையினை ஆய்வுகளே டூலமாகவே மேற்கொள்ள முடியும். உண்மையிலேயே காத்தான்குடி பிரதேசமானது பிறரது பார்வைக்கும் வெளித்தோற்றத்திற்கும் வசதிகள் நிரம்பிய, நகரமயமாக்க சூழலையும், பிறரது கவனத்தை ஈர்க்கும் தன்மையினையும் கொண்டுள்ளது. தொழில் பற்றாக்குறை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். அதே போல் ஒருபகுதியினர் இல்லாமல் அனைத்து மக்களும் பொருளாதார முன்னேற்றத்தினை அடைய வேண்டும் எனின் தொழில் வழிகாட்டல்கள் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறான வழிகாட்டல்கள் உளவியல் சார்ந்த கருத்துக்களின் மூலமாகவே மக்கள் மத்தியில் பரப்பப்படல் வேண்டும். ஏனெனில் எந்தவொரு சூழலிலும் குறித்த பிரதேசத்தினை விட்டு வெளியேர முடியாத என்ற மனநிலை கொண்வர்களை அவர்களுடைய மனநிலையில் இருந்தவாறு அறிவுரைகளை கூறி தெளிவுபடுத்த வேண்டும். இது தவிர காத்தான்குடியில் புதிதாக வர்தக மையங்களை திறப்பதற்கான வசதிகளும் இடப்பற்றாக்குறையும் காணப்படும் அதே வேலையில் அரசினால் முறையாக திட்டமிடப்பட வகையில் அதற்கான தீர்வுகளும் கட்டட முறைமைகள், வாராந்த சந்தை முறைமைகள் மற்றும் காத்தான்குடி உற்பத்தி பொருள்களின் சந்தைப்படுத்தலினையும் மேற்கொள்ள வேண்டும்.

காத்தான்குடி சூழ்நிலையினை பொறுத்தமட்டில் ஆடை, சப்பாத்து, ஏனைய உணவுப் பண்டங்கள் என்பன உட்பட பல்வேறு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவைகளுக்கான தரச்சான்றிதல்கள் வழங்கும் பட்சத்தில் இப்பொருட்களின் நுகர்வுகள் அதிகரிக்கக் கூடும். காத்தான்குடி பிரதேச மக்கள் விலை உயர்வாக காணப்பட்டாலும் தரமான பொருள்களினை வாங்கும் பழக்கம் கொண்டவர்கள். மலிவாக இருந்தாலும் தரச்சான்றிதழ் இல்லாத பொருட்கள் தங்களது பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படினும் அதை நுகர மறுப்பர். இலங்கையில் மொத்தமான வியாபார பொருட்களை கொள்வனவு செய்யும் தளங்களில் முதலாவது கொழும்பும் இரண்டாவதாக காத்தான்குடியுமே காணப்படுகின்றது. ஆனால் தரச்சான்று பெறும் முறைமை இல்லாமை இம்மக்கள் தொடர்ந்து பொருளாதார பின்னடைவை எதிர் கொள்ளவும் வாய்ப்பாக அமையும்.

காத்தான்குடியினைப் பொறுத்தவரையில் கூடுதலான மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கும் தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் இல்லை. ஆனால் காத்தான்குடியில் வேண்டிய அளவிற்கு மனித மூலதனம் காணப்படுகின்றது. ஆக இவ்வாறான மனித மூலதனங்களை முறையாக பயன்படுத்துவதன் மூலமும் கையாளுவதன் மூலமும் பாரிய பொருளாதார முன்னேற்றத்தினையும் மக்களின் வருமானம் அதிகரிப்பினையும் மேற்கொள்ள எதுவாக அமையும். இதனை அடையாளம் கண்டு பயன்படுத்த அரசோ தனியார் நிறுவனங்களோ முன்வர வேண்டும்.

சம அளவினால் ஆன வாய்ப்புக்களினை மக்கள் மத்தியில் வேறுபாடு இன்றி ஏற்படுத்த முன்வர வேண்டும். காத்தான்குடி பிரதேசம் தனியான முஸ்லிம் மக்களை கொண்டமைந்த பிரதேசமாக அமைவதால் இங்கு பெண்களுக்கான கட்டுப்பாடு, கடமை மற்றும் வரையரைகளும் காணப்படுகின்றன. பெண்கள் வியாபாரம் செய்வது முதல் தொழிலுக்காக வேறு இடங்களிற்கு செல்வது என்பது சவாலான விடயமாக அமைந்துள்ளது. காத்தான்குடியின் அருகில் அரையம்பதி எனும் பிரதேசத்தில் BRANDIX எனும் ஆடைத்தொழிற்சாலை இயங்கி வருகின்றது. அதில் இணைந்து தங்களது பொருளாதார விடயங்களை அதிகரிக்க பெண்களுக்கு ஆர்வம் காணப்பட்டாலும் அங்கு சென்று வேலை செய்யும் பெண்கள் மீதான தவறான சமூகப்பார்வை ஏனையோரை தடுக்கின்றது. இச்சமூகத்தின் தவறான பெயர்கள் மாற்றப்பட வேண்டும். காத்தான்குடியை பொறுத்தவரையில் ஆண்களை விட பெண்களே அதிகளவு காணப்படுகின்றனர். ஆக ஆண்களின் பங்களிப்பினை விட பெண்களின் பங்களிப்பானது ஒரு குடும்பத்திற்கும் முழு சமூகத்திற்கும் காத்திரமானதாகும். ஆக பெண்களின் தடைகள் அகற்றப்பட்டு சமூக ரீதியான பாதுகாப்பினையும் அளிக்க வேண்டும்.

இதுபோன்ற பல்வேறு மாற்று நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடல்களை மேற்கொள்ளும் போது வளர்ந்து வரும் பொருளாதாரத்தின் விளைவுகளில் ஏற்படும் சமூக பிரச்சினைகளையும் சவால்களையும் இனிவரும் காலங்களில் குறைத்து ஒரு பகுதியினர் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தமான சமூக மக்களும் முன்னேற்றத்தினை சமூக, பொருளாதார, கல்வி மற்றும் ஏனைய

அனைத்து விடயங்களில் அடையவும் தொடர்ந்தும் சுமூகமான வாழ்வினை நிலைநாட்டவும் பல ஏதுவான வாய்ப்புக்களினை ஏற்படுத்தித் தருவதாக அமையும்.

**உசாத்துணைகள்**

Savita Thakur Joshi. (1999) . WOMEN AND DEVELOPMENT-The Changing Senario, New Delhi, Mittal Publicstion.

2017. Annual Report. Kattankudy urban council.

காத்தான்குடி திட்டமிடல் பிரிவு. ஆண்டறிக்கை 2014-2017. பிரதேச செயலகம். காத்தான்குடி.

திருமதி கமலகுமாரி கருணாநிதி, (2015) . பால்நிலை சமத்துவமும் பொருளாதார வளர்ச்சியும், யாழ்ப்பாணம், அபி வெளியீட்டகம்,

Country Briefing Paper Women In Sri Lanka, (1999). Asian Development Bank Programs Development.

World bank ,(2012), gender differences in employment and why they matter, chapter5 in world development report 2012:gender equality and development ,Washington,DC: the world bank .

(2011 & 2015), Planning division. D.S. office Kattankudy. Retrieved from http;//www.kattankudy.ds.gove.lk/index.php?option=comco ntent&view=article& id =4&itemid=63&lang=en

Top five developed and developing countries. Retrieved from http;//www.investopedia.com/updates/top- developing-countries.

World Bank Team in Srilanka. (2010). world bank annual report. Retrieved from http;//www.worldbank.org/en//country/Srilanka/overview.

The World's Women Trends And Statistics,(2010 ).United Nation , New York. Available from http://study.com/academy/lesson/what-is-economic-development- definition-examples.html

**நேர்காணல்**

Mahir, S.D.M. Doctor (VVSC). MSc in Epidemiology, Founder member for Soceity Research and development and Director of Research institution for Social empowernment.

முஜீப், எம். ஐ. எம், மாணவ வெளிநாட்டு கல்வி உதவியாளர் மற்றும் பத்திரிகை ஆய்வாளர். (10.01.2019).

சிப்லி பாறூக், எம். எப். எம். பொறியியளாளர் மற்றும் காத்தான்குடி நகர சபை உறுப்பினர். ( 14.02.2019).